முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**
**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
**பாகம்: 562**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

13.04.2021, செவ்வாய்கிழமை

1. திருவெனும் சக்திகொண்டு கலியுகத்தின்
தவசியாய் என் சக்தியாய் வந்த ஆறுமுக அரங்கனே
குருவென்று இந்த கலியுக மக்கள் முழுமைபட உன்னை சரணடைய
குவலயமே ஞான உலகமாகுமெனக் கூறி
2. கூறியே சுப்ரமணியர் யானும் இனிதே
குருராஜன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி உரைப்பேன்
பெருமைபட அரங்கன் தர்மம் வளரவளர
பேருலகமே தர்மபலம் கூடி இனிதே
3. இனிதே அரங்கன் உன் கொள்கை மூலமாக
இணையில்லாத ஞான லோகமாக மாறும்
கனிவுகொண்டு உந்தனுள் யான் அற்புதம் நிகழ்த்த
கருணைபட நீ எவர்மேலெல்லாம் கரங்கள் நீட்டுகின்றாயோ
4. நீட்டுகின்ற அவரவர்க்கும் உந்தன் வழி என் சக்தி
நிலைத்தன்மை தந்து அவர்கட்கு பிறவாபேறு
மறுமை வெல்லும் சக்தியும் யோகமும் தந்து காத்தருளும்
மகத்துவம்பட உன் கரங்கள் வழி யானருள
5. அருளாக ஆற்றலாக சிவமாக சடாட்சரமாக
அனைத்துவடிவமாக நீதரும் தீட்சைகளில் எல்லாம்
ஆறுமுகன் யான் இரங்கி வருபவர்க்கு அருள்புரிவேன்
ஆற்றல்பட உன் சக்தி கூடி வருதல் காண
6. காணவே இந்த கலியுகம் படிப்படியாக மாற்றம் கண்டு
கந்தவேலன் என் வெளிப்பாடான ஞானமாக
பெருமைபட ஞான ஆட்சிக்காலமாக
புகலுவேன் அரங்கன் உன் சக்திவழி மாற்றம் காணும்
7. காண்பதற்கே உன்வழி கருணைக்கொண்டு
கந்தவேலன் யான் சூட்சுமங்கள் நிகழ்த்திவர
மேன்மைபட உலகோர் உன்வழி இணைய இணைய
மேலான இந்த மாற்றத்தை ஆறுமுகன் யான் ஞான யுகமாற்றமாக நடத்தி அருள்புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.